**செய்தி வெளியீடு எண். 76** **நாள். 03.22009**

# பத்திரிக்கை செய்தி

இந்திய அரசின் தொழிலாளர் துறையும் அமெரிக்க அரசின் தொழிலாளர் துறையும் இணைந்த கூட்டு முயற்சியில் இண்டஸ் ( INDUS ) குழந்தைத் தொழிலாளர் திட்டம் என்ற திட்டம் கடந்த 4 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆபத்தான வேலைகளிலிருந்து குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களுக்கு நல்ல கல்வியளிப்பதும், அவர்களது குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்வதுமாகும். இத்திட்டம் இந்தியாவில் 5 மாநிலங்களில், மொத்தம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காஞ்சிபுரம், திருவள்ளூர், நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் தற்போது இறுதி நிலையை அடைந்துள்ளதால் இந்தியாவில் இத்திட்டம் எவ்வாறு செயல்பட்டது, இத்திட்டத்தால் எந்த அளவிற்கு குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிக்கப்பட்டது, அவர்களின் குடும்ப வருமானம் பெருகியது, குழந்தைகள் மறுவாழ்வு பெற்றனர் போன்ற விவரங்களை சேகரிக்கவும், இது குறித்து திட்ட ஒருங்கிணைப்பர்களிடையே நேரடியாக விவாதிக்கவும் மாநில அளவிலான ஒரு நாள் பயிலரங்கம் இண்டஸ் திட்டத்தின் கீழ் சென்னையில் இன்று நடைபெற்றது.

இப்பயிலரங்கில் சர்வதேச தொழிலாளர் நிறுவன ஆலோசகர் திரு ரோஜர் மகோனிக், அமெரிக்க அரசின் தொழிலாளர் துறை பிரதிநிதி திருமதி மார்டினா நிகோல்ஸ், இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்ட தேசிய மேலாளர் திருமதி சுரினா ராஜன், இ.ஆ.ப., மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணைச் செயலர் திரு சுசில்குமார், தமிழக அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை முதன்மைச் செயலர் டாக்டர் ட்டி. பிரபாகர் ராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு அ. சுகுமாரன், கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு கே. செல்லமுத்து, அனைவருக்கும் கல்வித்திட்ட மாநில இயக்குநர் திரு எஸ். வெங்கடேசன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு ஜீவரத்தினம், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், AITUC திரு T.R.S. மணி, தொழிலாளர் முன்னேற்றப் பேரவை திரு சிங்கார ரத்தின சபாபதி, வேலையளிப்போர் சங்க பிரதிநிதி திரு T.M. ஜவகர்லால், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட திட்ட இயக்குநர்கள் கலந்துக்கொண்டனர்.

இப்பயிலரங்கை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை முதன்மைச் செயலர் டாக்டர் பிரபாகர் ராவ், அவர்கள் துவக்கி வைத்துப் பேசுகையில் இந்த இண்டஸ் திட்டம் 2004–ல் துவக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட ஆய்வின்படி 5 வயது முதல் 8 வயது வரை 409 குழந்தைத் தொழிலாளர்களும், 9 வயது முதல் 13 வயது வரை 7997 குழந்தைத் தொழிலாளர்களும், 14 வயது முதல் 17 வயது வரை 48,183 குழந்தைத் தொழிலாளர்களும் மேற்கண்ட 5 மாவட்டங்களிலும் இருப்பதாக தெரியவந்தது.

இவர்களில், 5 முதல் 8 வயதிலான 390 குழந்தைகள் நேரடியாக முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், 9 முதல் 13 வயது வரை உள்ள 7465 குழந்தைகள் மீட்கப்பட்டு மேற்கண்ட 5 மாவட்டங்களிலும் நடைபெறும் 140 சிறப்புப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பள்ளிகளில் இலவச பாடபுத்தகம், இலவச சீருடை, முட்டையுடன் கூடிய மதிய உணவு மற்றும் மாதம் ரூ. 100/– உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும், 14 முதல் 17 வயது வரையிலான 5195 குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மூலம் தொழிற்பயிற்சியளிக்கப்பட்டு, அவர்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் இதுவரை 3428 பேர்களுக்கு பல நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சுயதொழில் தொடங்க உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகளின் பெற்றோர்களின் வருமானத்தைப் பெருக்க 389 சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, இவர்களுக்கு ரூ. 20.46 லட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்களை முற்றிலும் அகற்ற ஒரு செயல்திட்டம் வகுக்கப்பட்டு, அதனை செயல்படுத்த தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாநில ஆதார மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் மாநிலத்திலிருந்து அகற்ற இண்டஸ் திட்டத்தின் மூலமும் பிற திட்டங்கள் மூலமும் சீரிய முயற்சி மேற்கொண்டு வருகிறதென்றும் விரைவில் தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை என்ற நிலை எட்டப்படுமெனவும் தெரிவித்தார்.

**<u>வெளியீடு</u> : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**